
பரிசுத்த பவுல் தமிழ் திருச்சபை
அஹமதி - குவைத்
நீ இனி அலைந்து திரிவதில்லை.
எரேமியா 4:1
செய்தி மலர்
ஜூலை மாதம் 2025
இதழ் : 02
மலர் : 23

# முதன்மை ஊழியரிடமிருந்து...





கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆசீரும் வாழ்த்துகளும் உண்டாவதாக. இம்மட்டும் நம்மையும் நம் குடும்பத்தையும் நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். கர்த்தரின் மேலான கிருபையினால் 2025 -ஆம் ஆண்டின் 7-வது மாதத்தில் பிரவேசிக்க செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். விடுமுறைக்கு செல்கின்ற மற்றும் விடுமுறையை முடித்து வருகின்ற யாவருக்கும் கர்த்தர் போதுமானவராய் இருப்பாராக.

யார் யாருடைய வாழ்க்கைகளில் கண்ணீர் இருந்ததோ, சோர்வு இருந்ததோ, வேதனை இருந்ததோ, கலக்கமிருந்ததோ எல்லாருடைய வாழ்க்கையையும் தேவன் ஆனந்த களிப்பாய் மாறப்பண்ணுவார். சாராள் சொன்னாள் **"தேவன் என்னை நகைக்கப்பண்ணினார்"** (ஆதி. 21:6) என்று. மிகுந்த கண்ணீரோடு வாழ்க்கையின் ஓரத்திற்கு சென்று கொண்டிருந்த சாராளுக்கு ஈசாக் என்ற நல்ல மகனை கொடுத்து தேவன் சாராளை நகைக்கப்பண்ணினார். நீங்களும் உங்கள் வாழ்க்கைக்கு தேவையானதை எதிர்பார்த்து சோர்ந்து உடைந்து போய் இருந்தால், சாராளுக்கு கர்த்தர் செய்ததுபோல கர்த்தர் உங்களையும் நினைவு கூர்ந்து உங்களுக்கு ஏற்றதை செய்து நகைக்கப்பண்ணுவார்.

தாவீதுக்கு விரோதமாக தான் பெற்று வளர்த்த மகன் அப்சலோம் எழும்பினபோது தாவீதின் வாழ்க்கை மிகுந்த கசப்பாக மாறிப்போனது. ஆனால் சங்கீதம் 30:11 -ல் சொல்கிறார் **"என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினார்"** என்று. ஏதோ ஒரு உபத்திரவத்தின் நிமித்தம் எப்படிப்பட்ட சத்துரு உங்களுக்கு விரோதமாய் எழும்பினாலும் தாவீது சொன்னது போல உங்களுடைய வாழ்விலும் ஆனந்த களிப்பு உண்டாகும்படி கர்த்தர் செய்வார்.

எஸ்தர் 9:21 -ல் **"அவர்கள் சஞ்சலம் சந்தோஷமாகவும், அவர்கள் துக்கம் மகிழ்ச்சியாகவும் மாறின மாதமாகவும் ஆசரித்து"** என்றும் வாசிக்கிறோம். மொர்தெகாயோடு யூதர்களுக்கும் சொல்லி முடியாத பெரிய உபத்திரவம் உண்டானது. யூதர்கள் உபவாசித்து தேவனை நோக்கி முறையிட்ட போது யூதர்களிடமிருந்த மரணபயம், மரண ஓலம் அதே மாதத்தில் தானே மகிழ்ச்சியாக மாரப்பண்ணின கர்த்தர் உங்களுடைய வாழ்க்கை யிலும் ஏதோ ஒரு சூழலினிமித்தம் எப்படிப்பட்ட ஓலமாக இருந்தாலும் கர்த்தர் அதை சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் மாறப்பண்ணுவார். கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரோடும் கூட இருப்பாராக. நம்மேல் கிருபை யுள்ள தேவனுக்கே என்றென்றும் மகிமை உணடாவதாக. ஆமென்.

**கர்த்தர் கிருபையில்**

**சகோ. ஆரோக்கியதாஸ். P**

**கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !**

**தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. தாஸ்கருணா அவர்களிடத்திலும்,**

**திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால் தங்களது காணிக்கைகளை சகோ. ஜெய சாம் டேனியல் அவர்களிடத்திலும்,**

**போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரன் அவர்களிடத்திலும்,**

**ஆலயம் கட்டுமான ஊழியத்திற்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. சாம் ஆனந்த் அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.**

# தேவச் செய்தி

## பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து சாட்சியாயிருப்பிர்கள் (அப் 1 :8 )

வாடிப்போன மரம் சாகும் தருவாயில் இருந்தது. தீடீரென்று அங்கு பெய்த மழையால் துளிர் விட்டது. பூப்பூத்து காய் காய்த்து சில நாட்களுக்கு ‑ள்ளாய் கனிகளைத் தந்தது. பறவைகளின் கூட்டம் அதன் கிளைகளின் வந்தமர்ந்தது. நிழல் தேடி மற்றும் கனிகளைக் கொய்ய மனிதர் கூட்டம் கூடினது. பாலை வனமாய் காணப்பட்ட மரம் சிங்காரச் சோலை வனமாய் மாறினது. காரணம் தீடீரென்று பெய்த மழை

ஆண்டவராகிய இயேசுவின் பிரிவு சீடர்களை துயரத்தில் ஆழ்த்தியது. வாடி வதங்கி சோர்ந்து நின்றனர். ஊயிர்த்தெழுந்த இயேசு நாற்பது நாளள வும் அவர்களுக்கு தரிசனமாகி தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தவைகளை அவர் களுடனே பேசி அவர்களைத் திடப்படுத்தினார். மறுபடியும் அவர்களை விட்டுப் பிரியும் வேளை வந்தது , பரத்தக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். அதற்கு முன்பதாக அவர் சொன்ன வார்த்தைகளைத்தான் அப்போ 1 :8 ல் வாசிக்கிரோம்.

### 1) காத்திருங்கள் :

பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளை யிட்டடார் (அப்போ 1 :5). சீஷர்கள் இயேசு சொன்ன வார்த்தைகளுக்கு முற்றி லுமாய்க் கீழ்ப்படிந்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டு தலிலும் தரித்திருந்தார்கள் (அப்போ 1 :14) இதை வாசிக்கின்ற சகோதரனே சகோதரியே சாதகமற்ற சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு சோர்வுற்று காணப் படுகிறிர்களா? புத்தாண்டில் பெற்ற வாக்குத்தத்தங்கள் என்னவாயிற்றென்ற சந்தேகங்கள் எழும்புகிறதா? கவலைப்படாதேயுங்கள். தேவனுடைய சமுகத் தில் காத்திரு. ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திரு. அன்னாள் ஜெபித் தாள் துக்கமுகம் மாறினது. யாக்கோபு போராடி ஜெபித்தான் இரவு முழுவ தும் ஜெபித்தான் அவனுடைய இருதயத்தைக் கவ்வியிருந்த காரிருள் அகன்றது. இஸ்ரவேல் உதயமானது. ஈசாக்கு வேண்டுதல் செய்தான் ரெபெக் காள் கர்ப்பந்தரித்தாள் இரட்டைக் குழந்தைகள் பிறந்தது. வேதாகமத்தில் இன்னும் அநேகருடைய ஜெபங்கள் பெருத்த ஆசிர்வாதங்களைக் கொண்டு வந்தது. சிலுவையில் தொங்கின கள்ளன் ஜெபித்தான் பரதீசுக்குள் அடி யெடுத்து வைக்கும் பாக்கியம் பெற்றான். ஜான் வெஸ்லியின் தாய் செய்த ஜெபம் மகத்தான ஊழியக்காரனை தேசத்துக்குத் தந்தது.

நீ செய்யும் ஜெபம் உனக்கு மாத் திரமல்ல உன் குடும்பத்திற்கு மாத்திரம் அல்ல உன் சந்ததிக்கே ஆசிர் வாதத்தைக் கொண்டு வரும். இதை ஒரு நாளும் மறந்திடாதே. எனவே தான் இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் (1 தெச 5 :17) என்று வேதம் சொல்லுகிறது. ஆதிகாலை யில் எழுந்து ஜெபித்திடு. " The Early Bird Catches The Warm " என்று ஆங்கிலப் பழமொழி உண்டு (காலையில் எழும் பறவை உணவைக் கண்டடையும்) இதற்கு எதிரான பழமொழி யோசனைக்கு வந்தது " The Sleeping Bird Catches The Storm " (காலை யில் தூங்கும் பறவை வேத னையைக் கண்டடையும்). நீ காலை யில் எழுந்து ஜெபிக்கும் பறவையா ? அல்லது தூங்கும் பறவையா? தீர் மானம் செய். தேவனின் கட்டளை யை உதறித் தள்ளிய யோனா கப்ப லின் அடியில் தூங்கினான் கட்ட ளையை மறந்தான் ஜெபிக்க மறந் தான் வந்தோ வேதனை மேல் வேத னை. தேவனுடைய கிருபை யைப் பற்றிக் கொண்டு மீனின் வயிற்றிலிரு ந்து மூன்று நாள் இரவு பகளாய் வேத வசனங்களைச் சொல்லி ஜெபித் தான் விடி வெள்ளி பிறந்தது யோனாவும் இரட்ச்சிக்கப்பட்டான். நினிவே ப் பட்டனத்தாரும் இரட்சிக்கப்பட்டார்கள்.

வேத வசனங்களை வாக்குத்தத்தங்களைச் சொல்லி ஜெபிக்கும் போது உன் வாழ்வில் அற்புதங்கள் நடக்கும் இதை ஒருபோதும் மறவா-தே. ஜெபித்திடு காலையிலே ஜெபித்திடு , இடைவிடாமல் ஜெபித்திடு , வேத வசனங்களைச் சொல்லி ஜெபித்திடு.

## <u>2) தேவ பிரசன்னம் :</u>

சீடர்கள் ஜெபத்தில் தரித்திருந்து காத்திருந்த போது பரிசுத்த ஆவி யால் நிரப்பப்பட்டார்கள். தேவ சமூகத்தில் ஜெபிக்கும் போது அவரு டைய பிரசன்னம் நம்மை நிரப்புகிறது. ஏனென்றால் இரண்டு போராவது மூன்று போராவது என் நாமத்தினாலே எங்கே கூடி யிருக்கியார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இயேசு இருக்கிறேன் என்றார் (மத் 18 : 20). எனவே தான் ஜெபம் பரலோகத்தை பூமிக்குக் கொண்டு வரும் என்று சொல்வது உண்டு. (யாக்கோபு 4 : 8) சொல்லுகிறது – தேவனிடத்தில் சேருங்கள் அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். தேவ பிரசன் னம் நமக்கு ஒவ்வொரு நாளும் தேவை ஒவ்வொரு வினாடியும் தேவை. யோசேப்பு காரிய சித்தியுள்ளவனாயிருந்தான் காரணம் - தேவ பிரசன் னம் தேவன் அவனோடிருந்தார். தானியேலின் காரியம் ஜெயமாயிருந் தது காரணம் தேவ பிரசன்னம். மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து

அவருடைய சத்தத்தை கேட்க தன்னை அர்ப்பணித்தாள். மார்த்தாளோ குக்கர் (சமையலறை) சத்தத்தைக் கேட்பதற்கு அர்பணித்தாள் குக்கராக வே மாறிவிட்டாள் கவலையும் கலக்கமும் அவளைச் சூழ்ந்தது சகோத ரனே சகோதரியே நீ யாராக இருக்கிறாய்? மார்த்தாளா ? மரியாளா ? வேதவசனிப்பிலும் ஜெபத்திலும் உன்னுடைய பங்கு என்ன ? படைப்பு களைப் பார்த்து மயங்கிடாதே படைத்த தேவனை மறந்திடாதே காலங் கள் வேகமாய் கடந்திடும் தாமதியாதே. கிருபையின் நாட்களை பிரயோ ஜனமாய் செலவு செய் கர்த்தர் உன்னை மேன்மைப் படுத்துவார்.

## 3) பெலனடைந்திடு :

உடற்பயிற்சி செய்பவர்கள் சத்தான ஆகாரத்தை உட்கொண்டு சரீர த்தில் நல்ல பெலன் பெற்று வாழ்வார்கள். அது அவர்களுக்கு மாத்தி ரம் அல்ல மற்றவர்களுக்கும் அவர்கள் பிரயோஜனமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். தேவ சமூகத்தில் காத்திருந்து ஜெபிக்கும் போது வேதம் வாசிக்கும் போது தேவ பிரசன்னம் நம்மைப் பெலப்படுத்துகிறது. எப்படி ஒரு மரம் கனி கொடுத்து நிழல் தந்து பிரயோஜனமாய் இருக்கிற தோ அதுபோல நாமும் ஆவியின் கனிகளைத் தருவதால் பலருக்கும் பிரயோஜனமாய் வாழ்ந்திட முடியும். நீங்கள் என்னில் நிலைத்திராவிட் டால் கனி கொடுக்க மாட்டீர்கள் (யோவான் 15 : 4) தேவ பிரசன்னம் மாத் திரமே ஒரு விசுவாசியை பெலனடையச் செய்யும். பரிசுத்த ஆவி வந்த போது சீஷர்கள் பெலனடைந்தார்கள். இயேசுவின் திருப்பணி அவர்கள் மூலமாய் தொடர்ந்தது. சாட்சிகளாய் வாழ்ந்தார்கள். வேத வசனம் பலரு க்கும் போதிக்கப்பட்டு சீஷர்கள் கூட்டம் பெருகினது. அன்று தொடங்கிய பணி இன்றும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. அகமதி தமிழ் திருச் சபையின் மூலமாய் தொடர நீங்களும் நானும் அதற்காக அழைக்கப்பட்டி ருக்கின்றோம். ஆண்டவர் நம்மை பெலத்தால் நிரப்புகிறார் எதற்கு பல ரையும் பெலப்படுத்த சாட்சியாய் வாழ்ந்திட நற் செய்தியை பலருக்கும் அறிவித்திட. சத்துருவானவன் கொண்டு வரும் வேற்றுமை உணர்வு களைக் களைந்திடுவோம் ஒரு மனப்பட்டு ஜெபிப்போம் பெலனடைந்து சாட்சியாய் வாழ்வோம் பலரையும் சாட்சிகளாய் மாற்றுவோம் தேவன் தாமே நம்மை ஆசிர்வதிப்பாராக ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்

சகோ. J . கிருஸ்டோபர் தேவராஜ்

# Praise The Lord

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே இந்த செய்தி மலரின் மூலம் உங்களை சந்திப்பதில் கர்த்தருக்குள் மகிழ்ச்சி அடைகிறேன்.

**"அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா வெளியரங்கமாய் பலனளிப்பார்".**

என்கிற தலைப்பின் அடிப்படையில் நாம் வேதத்தில் இருந்து சில வசனங்களை பார்ப்போம்

மத்தேயு – 6:6 " நீயோ ஜெபம் பண்ணும் போது. உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்கு பலனளிப்பார்" என்று கர்த்தருடைய வசனம் நமக்கு சொல்கிறது.

ஆம் பிரியமானவர்களே நாம் நம்முடைய தேவனை நோக்கி எப்படி விண்ணப்பம் செய்கிறோம். நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நமக்கு அநேக தேவைகள் காணப்படுகிறது. இந்த தேவைகளை நாம் எப்படிஎதிர் கொள்கிறோம். நம்முடைய ஜெபம் எப்படிபட்டதாய் காணப்படுகிறது நாம் சிந்தித்துப் பார்ப்போம் .

நாம் அந்தரங்கத்தில் தேவனை நோக்கி வேண்டிகொள்கிற எந்த காரியத்திலேயும் நிச்சயமாய் நமக்கு பதில் கொடுப்பார். ஆம் தேவ பிள்ளைகளே நாம் அந்தரங்கத்தில் வடிக்கிற ஒவ்வொரு கண்ணீர் துளிக்கும் நிச்சயம் பதில் உண்டு. நிச்சயமாய் ஒருநாள் நமக்கு நம் தேவன் வெளியரங்கமாய் பலன்கொடுப்பார். ஒரு வேளை காலம் தாமதம் ஆகலாம் ஆனால் கர்த்தருடைய வசனம் மாறாது.

மத்தேயு – 24 : 35 "வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வர்த்தைகளோ ஒழிந்து போவதில்லை"..

ஏசாயா – 55 : 11 "அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும் அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" என்று வேதம் நமக்கு தெளிவாய் சொல்கிறது.

1 சாமுவேல் - 1 : 10-16 வசனங்களை நாம் பார்க்கும் போது அன்னாளின் விண்ணப்பம் எப்படிபட்டதாய் காணப்படுகிறது. அன்னாள் தன்னுடைய இருதயமாகிய அந்தரங்கத்திலே விண்ணப்பம் செய்கிறாள் கண்ணீர்

விட்டு இருதயத்தை ஊற்றுகிறாள். அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைகிறது

அவளுடைய விண்ணப்பம் ஏலியின் பார்வையில் வெறி கொண்டவளைப் போல் காட்டியது. ஆனால் கர்த்தருடைய பார்வையில் விலையேறப் பெற்றதாய் காணப்பட்டது. கர்த்தர் அவளுக்கு வெளியரங்கமாய் பதில் கொடுத்தார் என்று பார்க்கிறோம்.

ஆம் பிரியமானவர்களே இன்று நம்முடைய விண்ணப்பங்கள் எப்படி காணப்படுகிறது என்று நாம் சிந்தித்து பார்ப்போம்!!! நம்முடைய வேதனைகளையும் விண்ணப்பங்களையும் உலகபிரகாரம் பேசி கொண்டு இருக்கிறோமா? ஆல்லது தேவனை நோக்கி அந்தரங்கமாய் ஜெபிக்கிறோமா?

எந்த சூழ்நிலையாய் இருந்தாலும் கர்த்தரை மட்டும் நோக்கி பார்ப்போம் நிச்சயமாக ஒருநாள் கர்த்தர் நமக்கு வெளியரங்கமாய் பலன் கொடுப்பார் என்பதில் சந்தேகமில்லை.இன்னும் அநேக காரியங்களை குறித்து வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

மத்தேயு – 6 :2-4 "நீயோ தர்மஞ்செய்யும் போது உன் தர்மம் அந்தரங்கமாய் இருப்பதற்கு உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது.அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாதாமே உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்"

நம்முடைய உபவாசிக்கும் முறை எப்படி காணப்படுகிறது?

மத்தேயு 6 : 17-18 "நீயோ உபசாசிக்கும் போது அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல் அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக உன் தலைக்கு எண்ணெய் பூசி உன் முகத்தைக் கழுவு.அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்".

ஆம் கர்த்தருடைய பிள்ளைகளே இந்த வசனங்களை ஆராய்ந்து இந்த வசனங்களின்படி வாழ நம்மை நாமே அர்ப்பணிப்போம்.

கர்த்தருடைய நாமம் மாத்திரம் மகிமைப்படுவதாக ஆமென்!!!

- சகோதரி . ஷிபா பிரசாத்

# “ வாலிபனே உன் சிருஷ்டிகரை நினை ”

சங்கீதம் 119: 9’‘ வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால் தானே’’.

இன்றைய வாலிபர்கள் தேவனோடு பேசுவதை விட்டு விட்டு உலகத்தோடு ஐக்கியம் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் தேவனுக்கு முன்பாக வேஷம் தரித்து திரிகின்றனர். இன்றைக்கு வாலிபர்களை வீழ்ச்சியடைய செய்யும் படி பிசாசு வைத்திருக்கும் கண்ணி உலக ஆசை இச்சைகள். இவர்கள் வைத்திருக்கும் உலக பொருள்கள் மூலம் இவர்களை மயக்கி அடிமைபடுத்தி தேவனை தேடாதபடிக்கு தங்களுடைய வாலிப நாள்களில் சிருஷ்டிகரை நினைக்காதபடிக்கு சாத்தான் தந்திரமாக உலக ஆவியினால் இவர்களை ஆளுகை செய்கிறான்.

அதாவது சாத்தான் இந்த கடைசி நாள்களில் மிகவும் தந்திரமாக வாலிபர்களின் ஆத்துமாக்களை திருடவும் அழிக்கவும வருகிறான். அன்றைக்கு இயேசு தன் சீஷர்களை குறித்து பிதாவிடம் பேசும் போது நான் உலகத்தானல்லாதது போல இவர்களும் உலகத்தாரல்ல ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது.

யோவயன் 17 : 14-17 - நான் உலகத்தானனல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம்.

தங்களை பரிசுத்தமாக்கும்படிக்கு கொடுக்கபட்ட சத்திய வசனத்தை தியானிக்கும் அநேகருடைய விலையேறப்பெற்ற நேரத்தை பிசாசானவன் திருடிவிட்டான். அடுத்ததாக இவர்களை உலகத்துக்கு அடிமையாகி உலகத்துக்கு ஒத்த வேஷம் தரிக்க செய்து தேவனால் சகல சத்தியத்துக்கும் கீழ்படிந்து நடத்தப்படும்படிக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரை புறக்கணிக்க செய்கிறான். ( யோவான் 14 : 17 ) உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது அவர் உங்களுடனே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்)

பெற்றோர்களே ஊழிக்காரர்களே உங்கள் வாலிபர்களை கூர்ந்து கவனியுங்கள். அநேக வாலிபர்கள் கடமைக்காக வேதாகமத்தை வாசிக்கிறார்கள். நாம் மீட்கப்படும்படியாக தன் ஜீவனையே தந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நேசித்து சகல சத்தியத்துக்குள்ளும்

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

**" உன் பேரை பெருமைப்படுத்துவேன்**
**நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ( ஆதி-12:2 ) "**

செல்வி . ரெஜீனா ராம மூர்த்தி
செல்வன் . ஜோசப் பிரின்ஸ் ஜெகநாதன்
செல்வன்.ஏனோக்ஜோன் மார்க் அந்தோணி
சகோ . அருண் செல்வகுமார்
செல்வி . கீதா மகேஷ் ராஜ்
செல்வி . அ/ பியா அரோக்கியா தாஸ்
சகோதரி . சினேகா
செல்வன் . டேனியல் கிறிஸ்டோபர் ஜான் போஸ்கோ
செல்வி . குாவியா கண்ணன்
செல்வன் . அஸ்வினி தினே\;
செல்வன் . கிதியோன் ஞானசேகர்
செல்வி . ஜெசுவா பிரேஸி இம்மானுவேல்
சகோ . ஆல்வின் ஜூலியஸ்
செல்வன் . அல்போன்ஸ் கிறிஸ் அருண்
செல்வன் . ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஜான் போஸ்கோ
செல்வி . ஜியோனா ஷரண் செல்வ சிங்
செல்வன் . நிதின் சுரேந்திரன் சந்தோஷ்
சகோதரி . ஏஞ்சலினா மணிராஜ்
செல்வன் . ச/ ப்ரின் திமோதி சிவகுமார்
செல்வன் . ஜான் லூயிஸ் ஜான் ஹட்சன்
செல்வி . வெண்பா ஜாய்ஸ் ரவி ஜான்

சகோதரி . உஷா ராணி டேனியல்
சகோதரி . அமலோர்பேவா மேரி ஜான் போஸ்கோ
சகோ . தாமஸ்
செல்வன் . மோனித் ராஜ் வெங்கடேஷ்
சகோதரி .ஜெபராணி தர்மர்
சகோ . தாஸ்
செல்வன் . மெல்வின் சாம் சாமுவேல் தாஸ்சையா
சகோ . சதீஷ் குமார் எத்திராஜ்
செல்வி .பிரக்யா சந்தோஷ் குமார்
செல்வன் . கிளாட்வின் சாமுவேல் எட்வின்
சகோதரி . தேவசோருபி கமலதாசன்
செல்வி . ஹன்னி ஹர்ஷிதா வெங்கடேஷ்
சகோதரி . ரோஸ்லின் மேரி பால் ராஜ்
சகோ . ஸ்டாலின்
செல்வி . லிடியா இல்போன்சா குணா
சகோதரி . வின்செண்ட் ஸ்வீட்
சகோதரி . ஹெப்சிபா பாமா சாம் ஆனந்த்
சகோதரி . பெபின் மெர்ரிஜோ ஜெய் சாம்
சகோ . அசோக் குமார்
சகோ . சைமன் ஜெயகுமார்
சகோ . ஸ்டீபன் ஜெயகுமார்




# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்



திருமதி.திரு – அசோக் குமார் – ஜோன் ஆ/ ப் ஆர்க்
திருமதி.திரு – பக்தராஜ் – ஷீலா இன்ப ராணி
திருமதி.திரு – ஜெஸ்டின் – அனிதா
திருமதி.திரு – ஜோன்ஸ் செல்வ சிங் – மெர்லின் லிக்னி
திருமதி.திரு – வர்கீஸ் – பத்மினி
திருமதி.திரு – ரீச்சர்ட்சன் டேனியல் – பிரியதர்ஷினி
திருமதி.திரு – சதீஷ் குமார் – ஜீனா
திருமதி.திரு – டேனியல் தேவ பிரசாத் மனோஜ் – உஷா ராணி



# ஜூலை மாத நிகழ்ச்சி நிரல்

| ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை | | |
|---|---|---|
| நாள் | ஆராதனை | செய்தி |
| 06/07/2025 | சகோதரி . லதா கிறிஸ்டோபர் | சகோதரி.ஹெப்சிபா சாம்ஆனந்த் |
| 13/07/2025 | சகோ . எபிநேசர் | சகோ . டேனியல் மனோஜ் |
| 20/07/2025 | சகோதரி . ஆஸ்லின் சுபின் | சகோதரி . பிரிசில்லா ஆமோஸ் |
| 27/07/2025 | சகோ . ஜான் போஸ்கோ | சகோ . ஆரோக்கிய ராஜ் |

| வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை | | |
|---|---|---|
| நாள் | ஆராதனை | செய்தி |
| 04/7/2025 | சகோ . ஜெகநாதன் | சகோ . கிறிஸ்டோபர் தேவராஜ் |
| 11/07/2025 | சகோ . தாமஸ் | சகோ . ஸ்டாலின் |
| 18/07/2025 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 25/07/2025 | சகோ . டேவிட் | சகோ . யேசுரத்தினம் |

## ஆராதனை ஒழுங்குகள்

10/7/2025 வியாழன் அன்று முழு இரவு ஜெபம்
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

12/7/2025 சனிக்கிழமை – அன்று சகோதரிகள் ஐக்கியக் கூடுகை
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம் –6:30 PM– 8:30 வேத வினா பகுதி – கலாத்தியர்

25/7/2025 வெள்ளி அன்று வாலிபர் ஐக்கியக் கூடுகை
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம் - 6:30 PM-8:15
வேத வினா பகுதி – யோபு

**செவ்வாய் கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெபக்கூடுகை
இடம் – பாஹாகீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி
இடம் – பாஹாகீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகமப் பள்ளி
இடம் – பாஹாகீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:00 வரை

**திங்கட்கிழமை**
பெண்கள் ஐக்கியக் ஜெப கூடுகை
இடம் – பாஹாகீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:00 முதல் 7:00 வரை

தொடர்ச்சி 9-ம் பக்கம்

நடத்தும்படியாக பரிசுத்த ஆவியானவரால் நிரப்பபடும்படிக்கு தேவ சமூகத்துக்கு செல்லும் வாலிபர்கள் தான் வசனத்தால் தங்களை காத்து கொண்டு ஜெயம் கொண்டவர்களாக எழும்புவார்கள் (1 கொரிந்தியர் 2 :12 ) நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல் தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவி யையே பெற்றோம்).

இன்றைக்கு இந்த உலகத்தின் ஆவி நாம் பயன்படுத்தும் smart phone வழியாக whatsapp facebook மற்றும் அநேக இணையதளங்கள் மூலம் வாலிபர்களை ஆண்டவருக்கு நேரத்தை கொடுக்காதபடிக்கு ஆளுகை செய்து கொண்டிருப்பதால் இவர்கள் தேவ சமூகத்துக்கு சென்று தேவ வல்லமையை பெற்று கொள்ளாததினால் தேவபெலனற்று உலக ஆசை இச்சைகளினால் வீழ்ச்சியடைந்து விட்டார்கள். (1 யோவான் 4 : 5 ) அவர்கள் உலகத்துக்குரியவர்கள் ஆகையால் உலகத்துக்குரியவை களைப் பேசுகிறார்கள் உலகமும் அவர்களுக்கு செவிகொடுக்கும்)

இன்றைக்கு அற்பமான நிலையில்லாத உலக இச்சைகளுக்காக தேவனை விட்டு விலகி உலகத்துக்கு செவி கொடுக்கும்படி பிசாசு

அநேகரை அடிமைபடுத்திவிட்டான். வாலிபனே நீ தேவனோடு நடக்க அழைக்கப்பட்டவன். தேவனை தரிசிக்க கூடிய உன் கண்கள் உலகத்தின் ஆசை இச்சைகளை பார்க்கும்படிக்கு வஞ்சிக்கபட்டு போனதை நீ உணர வில்லையா? நிலையில்லாத உலகமா அல்லது நித்தியமான பரலோகமா? நீ எங்கே போய் கொண்டிருக்கிறாய்? நீ எதை வாஞ்சித்து கொண்டிருக் கிறாய்? உன் வழிகள் பாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதை இன்னும் நீ உணரவில்லையா? (1 யோவான் 2 : 15-16 உலகத்திலும் உலகத் திலுள்ள வைகளிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில் மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்தி லுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்)..

வாலிபனே நீ தேவனை விட்டு விலகி இருளின் ராஜ்ஜியத்தின் அடிமைதனத்தில் இருக்கிறாய். உன் இளமையின் சந்தோஷத்துக்காக உன் கண்ணின் இச்சைகளில் நடக்கும் உன்னை நியாயத்தீர்ப்பில்

கொண்டு வந்து நிறுத்துவார். எனவே மனம் திரும்பி உலகத்தை விட்டு விட்டு தேவ சமூகத்துக்கு வா? தேவனுடைய ராஜ்ஜியத்தை தேடு. காணப் படாத நித்தியமான மறுமைக்கானவைகளை நோக்கிப்பார். உனக்காக ஜீவனை கொடுத்த இயேசுவை புறக்கணியாதே!! (1 யோவான் 2 : 17 )உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்)

பிரசங்கி 12: 1-2 நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை தீங்குநாட்கள் வராததற்குமுன்னும் எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும் சரிரமானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும் அவரை வாலிபப்பிராயத்திலே நினை. ஆமென்.

– கிறிஸ்துவின் பணியில்

ATC Youth Team

Be an example : 1 Timothy 4 : 12

## !!! இருக்கிறவராகவே இருக்கின்றேன் !!!

ஆயிரம் பொய் சொன்னாய் அழகழகாய் கதை சொன்னாய்
அதிகாரம் உன்கையிலென்று ஆசைகள் பல கொண்டாய்
இச்சைகள் உன்மனதை ஆட்கொள்ள எனை மறந்தாய்
ஆளுமை நானென்று நீ அறியாமல் போனதென்ன
சித்திரமாய் உனை வரைந்து பத்திரமாய் பாதுகாத்தேன்
சீக்கிரமாய் வருவேன் என்று சத்தியம் நான் உரைத்தேன்
என் நீடிய பொறுமையினால் சலித்து போனாயோ
சத்துருவின் வலையினிலே சிக்கிக்கொண்டாயோ
வாசிக்கும் வசனமெல்லாம் வெறும் வார்த்தையென்று நினைத்தாயோ
விசுவாசம் இல்லாமல் சந்தேகம் கொண்டாயோ
நீ வழிமாறி போவதற்கா வாசற்படியில் நிற்கின்றேன்
விலையேற பெற்றவளே விசுவாசம் குறைய வேண்டாம்
இருக்கின்றேன் என்றென்னை அறிமுகம் செய்தேனே
இன்னுமா உணரவில்லை என் இயேசுவின் நேசமதை
அடையாளம் கண்ட பின்பும் காணாமல் போனதென்ன
இருக்கிறவராகவே இருக்கின்றேன் தினமும் உன்னை காக்கின்றேன் - தேவ
சமூகம் தேடி வந்துவிடு சாட்சியாய் இவ்வாழ்வை வாழ்ந்து விடு. .. ..

AMEN – சகோதரி . வனிதா

# ஜீலை மாதத்திற்கான வேத வினா!

**கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை லூக்கா புஸ்தகத்திலுள்ள வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. அதிகமதிகமாய் விருத்தியடைந்தது யார் ? ஏதில் ?
2. நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சத்தமிட்டது யார் ?
3. எலிசபெத்தின் தகப்பன் பெயர் என்ன ?
4. நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் யார் ?
5. நான் பாவியான மனுஷன் என்று யார் யாரிடம் சொன்னது ?
6. எல்லா மனுஷரும் உங்களைக் குறித்துப் ………… பேசும் போது உங்களுக்கு………..
7. வானபரியந்தம் உயர்த்தப்பட்ட நகரம் எது ?
8. தேவனுடைய வசனம் எது ?
9. ………. நல்லது எது ?
10. கோபுரம் விழுந்து பதினெட்டு பேர் மரித்தார்கள் - எங்கே ?
11. ஐசுவரியவான் எங்கு பிரவேசிப்பது அரிதாயிருக்கும் ?
12. இயேசு யாருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பி போனார் ?
13. ………..வராமல் போவது கூடாத காரியம்.
14. அவர்களெல்லாரும் தங்கள் ….தேவனுக்கென்று …. ….போட்டார்கள்.
15. முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்து அன்றையத் தினம் சிநேகிதரானவர்கள் யார் ?

குறிப்பு:- விடைகளை வருகின்ற 20-07-2025 க்குள் சபையின் செயலாளரிடமோ (66159784) அல்லது செய்திமலர் பொறுப்பாளர்ரிடமோ (917305651625) கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை லூக்கா புஸ்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும் .

(கேள்வி மற்றும் அன்பளிப்பு சகோதரி. எப்சிபா ஸ்டீபன் குடும்பத்தினர்கள்)

## ஜீன் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| சகோதரி . வனிதா | சகோதரி . தயா யேசுரத்தினம் |
| சகோதரி . ஜெஸ்லட் | சகோதரி . விக்டோரியா |
| சகோதரி . நகோமி ஜான்சன் | சகோதரி . மரிய குளோரி தாஸ் |
| சகோதரி. பிரிஸ்கிலா செங்குட்டுவன் | சகோதரி . ஜீனா சதீஸ்குமார் |
| சகோ . ஏபினேசர் | சகோதரி . பியூலா ஜெகநாதன் |
| சகோ . பக்தராஜ் | சகோதரி . சுகந்தி |
| சகோதரி . சாந்தி | சகோதரி . நித்யா ஜோன்ஸ் |
| | சகோதரி . நிஜா |

## ஜீன் மாத வேத வினாவுக்கு விடை-அப்போஸ்தலர் அதிகாரம்

1) பர்னபா அனனியா (4:37 , 5:1)
2) தபித்தாள் (9:40)
3) ஜெபம் (4:31)
4) கொர்நேலிவு (10:2)
5) பேதுரு , யோவான் (8:16)
6) வேதவாக்கியங்களை (17:11)
7) ஆற்றின் அருகே (16:13)
8) கொர்நேலியுவின் ஜெபங்களும், தருமங்களும் (10:4)
9) ஜெபம் (11:5)
10) ஜெபம் வேண்டுதல் (1:14)
11) ஜெபவேளை (3:1)
12) யூதா (9:11)
13) ஸ்தேவான் (7:60)
14) ஜெபம் , தேவனைத் துதித்துப்பாடு (16:25)
15) சபையார் (12:5)

## " நீதி செய்யும் தேவன் "


" சாந்தம் ஜெயிக்கும் சத்தியம் வெளிப்படும்''
நம் மனதின் காயங்கள் ஆற்றிடும் நேரமிது
அவர் தழும்புகளால் நாம் குணமாக்கப்படும் காலமிது
மண்ணில் பிறந்த நாம் மண்ணுக்கே திரும்பும் உலகமிது
விண்ணின் வேந்தன் இவ்வுலகில் மனிதர்களை மீட்கவே மனுவுருவானார்
நீதி என்னும் அச்சாரம் - நம் இயேசு இராஜனின் அரசாங்கம்
அதில் நீதியுள்ள நியாயாதிபதியும் அவரே
உண்மை என்னும் பண்பில் மிகச்சிறந்தவரும் அவரே
நம் மனதின் வலி வேதனைகளை அறிந்தவரும் அவரே
நமக்கு நீதி செய்ய காத்திருப்பவரும் இவ்வுலகில் அவர் மட்டும் தான்
உலக மனிதனையோ நண்பர்களையோ உறவினர்களையோ அல்ல
நாம் நம் ஜீவனுள்ள தேவனையே நம்பி வெற்றி நடைபோட
நீதி வெளிப்படும் நாளொன்று வர காத்திரு அது நிச்சயம் வெளிப்படும்
வானின் மீதில் நீதியுள்ள நியாயாதிபதியாய் வரும் வேளைக்காய் காத்திருப்போம்
அனுதினமும் நாம் அவர் நீதியைப் பெற்று வாழ்ந்து சுகித்திருப்போம்
இயேசப்பா நம்மை ஆசிர்வதித்தருளுவாராக

– **A. பியூலா மெர்சிபால்**

இன்று இருப்பார் நாளை இல்லாமற் போவார்
இருக்கும் வரை எல்லாரிடமும் அன்பாயிரு
இறந்த பின் நாம் எங்கே போவோம்
இந்த வாழ்க்கை வாழ இவ்வுலகில்
இறக்கும் முன்னே இயேசுவிடம் வந்துவிடு
பாவம் நீங்க கழுவப்படு
பரமனின் அன்பை ருசித்திடு

இயேசுவின் வார்த்தை உந்தன்
வாழ்வை உயிர்ப்பிக்கும்
இயேசுவின் காயங்கள்
உன்னை குனமாக்கும்
இயேசுவே நம் வாழ்வின் உயிர்முச்சு
இருப்பதோ ஒரு வாழ்வு அதை
இயேசுவுக்காய் அர்பணிப்போம்

– **சகோதரன். குணா.**




# July Month Quiz for Children



(Write the answers using the King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

1) Who created the heaven and the earth?
2) What did GOD saw was very good?
3) Where did GOD plant a garden?
4) What was man formed from?
5) Which tree was forbidden?
6) Who called to Adam in the garden?
7) Who walked with GOD and was taken?
8) What filled the earth in noah's time?
9) What did GOD tell noah to build?
10) What sign did GOD give to never flood again?

Note:-All children's should read the bible carefully and find the answers. Find the answers in the book of **Genesis chapter : 1 -10**. Submit your answers to the children bible school co-ordinator on or before 20/7/2025. Please mention the reference along with the answers.

## Answer for the children Quiz June

1. Mary
2. Repentance for the remission of sins (Mark 1 :4)
3. Because of the hardness of their heart (Mark 3 :5)
4. Whoever blasphemes against the Holy spirit never has forgiveness (Mark 3 : 29-30)
5. 7 parables (Mark 4)
   - Parable of the sower
   - Parable of the lamp
   - Parable of the measure
   - Parable of the growing seed
   - Parable of the mustard seed
   - Parable of the divided kingdom
   - Parable of the strong man
6. 4 Times
   - Mark 3 :4
   - Mark 3 : 16 - 19
   - Mark 5: 25
   - Mark 5 : 42
7. Mark 4 : 14 -20
   Seed = Word
   Birds = Satan takes the word
   Scorched by sun = Those with no roots, fall in tribulation
   Throns = Wordly cares choke the word
   Good ground = Those who hears , accept and bear fruit.
8. 9 Miracels
   - Healing a man with an unclean sprit (Mark 1 : 23-26)
   - Healing peter's mother in law (Mark 1 : 29-31)
   - Healing many sick and casting out demons (Mark 1 : 32-34)
   - Healing a leper (Mark 1 :40-45)
   - Healing a paralytic (Mark 2 : 1-12)
   - Healing a man with a withered hand (Mark 3 : 1-6)
   - Stilling the storm (Mark 4 : 35 - 41)
   - Healing the gerasene demoniac (Mark 5 : 1-20)
   - Healing the woman with an issue of blood and raising Jairus daughter (Mark 5 : 21 - 43)
9. To pray in a solitary place (Mark 1 :35)
10. Because he healed on the sabbath (Mark3:6)

## THE TWELVE SONS OF JACOB AND THE TRIBES OF ISRAEL

1.Ruben - Mother : Leah
Meaning of name : ‘’ Behold a son’’
2.Simeon - Mother : Leah
Meaning of name : ‘’God has heard’’
3.Levi - Mother : Leah
Meaning of name : ‘’Joined’’
4.Judah - Mother : Leah
Meaning of name : ‘’Praise’’
5.Dan - Mother:Bilhah(Rachel’s Maidservant)
Meaning of name : ‘’He Judged’’
6.Naphtali - Mother : Bilhah
Meaning of name : ‘’My Struggle’’

7.Gad - Mother : Zilpah (Leah’s Maidservant)
Meaning of name : ‘’ Good fortune’’
8.Asher - Mother : Zilpah
Meaning of name : ‘’ Happy’’
9. Issachar - Mother : Leah
Meaning of name :‘’There is reward’’
10.Zebulun - Mother : Leah
Meaning of name : ‘’Dwelling’’
11.Joseph - Mother : Rachel
Meaning of name : ‘’May he add’’
12.Banjamin - Mother : Rachel
Meaning of name : ‘’Son of my right hand’’

**- Adriel Kemuel Dhas**


## THE MIRACLES OF JESUS

Jesus did many miracles. He helped people, by healing not only their sick bodies but also their souls. Each of His miracles showed God’s glory and proved that Jesus is The Son of God

- Changing water into wine (John 2 : 1- 11)
- Healing and officer’s son (John 4 : 46 – 54)
- Casting out demons (Mark 1 : 21 – 28 , Mathew 8: 28- 32)
- Healing Peter’s mother-in law (Luke 4 : 38 – 39)
- Filling nets with fish (Luke 5 : 3 – 11)
- Healing the bleeding women ( Mark 5 : 25 – 34)
- Healing Jairu’s daughter ( Luke 8 : 41 – 42 , 49 – 56)
- Healing lepers (Mathew 8 : 1 – 3 , Luke 17 : 11 – 19)
- Healing the soldiers servant (Mathew 8 : 5 - 13)
- Making the paralyzed man walk ( Mark 2 : 1 - 12)
- Healing the man with a crippled hand (Luke 6 : 6 – 10)
- Bringing the widow’s son back to life (Luke 7 : 11 – 17)
- Calming the wind and waves (Mathew 8 : 23 – 27)
- Healing the sick man by the pool (John 5 : 1 – 15)
- Feeding more than 5000 people ( Mark 6 : 35 – 44)
- Walking on water (John 6 : 16 – 21)
- Freeing the girl from a demon ( Mathew 15 : 21 – 28)
- Healing the man who could not hear or speak (Mark 7 : 31 – 37)
- Feeding more than 4000 people (Mathew 15 : 29 – 39)
- Healing the blind man in Bethsaida (Mark 8 : 22 – 26)
- Healing the man who was born blind (John 9)
- Freeing the boy from a demon (Mathew 17 : 14 – 20)


**- Andrea Magdalene**

# Kids Corner










## CHILDREN THOSE WHO WROTE QUIZ ANSWER

**Andrea Magdalene Dhas**
**Adriel Kemuel Dhas**
**Affia Arokiyadhas**
**Ryan Satheesh**
**Joshua Johnson**
**Jayden Paul**
**Abed Raj**
**Ashlyn Keziah**
**D.J. Amish**
**Vincy Raani**

# கடந்த மாத நிகழ்வுள் சில















# ஊழியம் செய்ய ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

### முதன்மை ஊழியர்

Bro. ஆரோக்கியதாஸ்

Ph. 9987 0126

### செயலாளர்

Bro. ஆரோக்கியராஜ்

Ph.60918793

### பொருளாளர்

Bro. ஜான்சன்

Ph.97610275

### பெண்கள் ஐக்கிய தலைவி

Sis. டெய்சி எபிநேசர்

Ph.60686612

### வாலிப ஐக்கிய தலைவர்

Bro. M. கிறிஸ்டோபர்

Ph.67096449

Church e-mail ID- ahmaditamil.kw@hotmail.com

Church Website Address - ahmaditamilchurch.com

தங்களது
ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய்
இருக்கிறது.

**Church Postal Address**
Your Name
PO.Box No: 46795,
Fahaheel, 64018,
Kuwait.

Private Circulation Only